## 11: தேவனாம்பியதிஸ்ஸா முடிசூடல்

அமைதி நிலவிய நாட்டில் சுவனபாலியின் (*Suvannapäli*) மகனான மூதசிவா (*mutasiva*), அவருடைய தந்தையின் மரணத்திற்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். மன்னன் தன்னுடைய ஆட்சி காலத்தில் முன் நீர்த் தேக்கங்கள், குளுமையான, பச்சைப் பசேல் என்ற செடி கொடிகள் அடர்ந்த, பல விதமான பழ மரங்கள், பூக்கள் போன்ற இயற்கை அழகுகள் கொண்ட மாபெரும் தோட்டத்தை அனுராதபுரத்தின் தென் பகுதியில் மஹாமேஹவனா (*Mahameghavana*) என்ற பெயரில் அமைத்திருந்தார். அது மட்டும் அல்ல அந்த தோட்டத்தில் பருவம் தவறாமல் மழை பெய்து அந்த பிரதேசத்தையே குளுமையாக வைத்திருந்தது.

மூதசிவா அறுபது ஆண்டுகள் அனுராதபுரத்தில் ஆட்சி செய்தார். அவருக்கு பத்து மகன்களும், அனுகுலாத்தி மற்றும் சாமனவன்னா (*anukulati, samanavanna*) என்ற சம அழகு மிக்க இரு மகள்களும் இருந்தனர். அவருடைய மகன்களில் இரண்டாமவரான தேவனாம்பியதிஸ்ஸா (**Devanampiyatissa**) என்பவரே அவர்களில் மிக புத்திசாலியாகவும், அனைத்து நற்குணங்களும் பெற்றவராக இருந்தார்.

தந்தையின் மரணத்திற்குப் பிறகு தேவனாம்பியதிஸ்ஸா பதவி ஏற்ற பொழுது பல அதிசயங்கள் நிகழ்ந்தன. பூமிக்கு அடியில் புதைபட்டிருந்த நகைகளும், ஆபரணங்களும் லங்காவின் அனைத்து இடங்களிலும் தாமாகவே பூமிக்கு மேலே மிதந்து வந்தன. கடலில் புதைந்திருந்த கப்பலில் இருந்தும், இயற்கையாகவே தோன்றி கடலில் மூழ்கி இருந்த விலை

மதிப்பற்ற நவரத்தினக் கற்களும், ஆபரணங்களும் கடலுக்கு மேலே மிதந்தன.

சாட்டா (*Chata*) மலைக்கடியில் தெய்வ இரதங்களை இழுக்கப் பயன்படும் பருமனான சணல் கயிற்றைப் போல சுற்றிக் கொண்டு வெள்ளியைப் போல மின்னிய விழுதுகளுடன் கூடிய மூங்கில் மரங்கள் வளர்ந்திருக்க அதை சுற்றி தங்கம் போல் மின்னும் இன்னும் பல செடி கொடிகளும், பல்வேறு வண்ணமிகு பூக்கள் குலுங்கிய செடி கொடிகளும் தோன்றின. கண்களைப் பறிக்கும் வண்ணங்களில் பறவைகள் கூடி அமர்ந்திருந்த மரங்கள் அங்கு இருந்தன. எட்டு வித முத்துக்கள் கடலுக்குள் இருந்து வெளி வந்து மிதந்தன. அதைத் தவிற மாணிக்கம், வைரம், பவளம் என பல்வேறு நவரத்தினக் கற்கள் கிடைத்தன. இவை அனைத்திற்கும் காரணம் தேவனப்பியதிஸ்ஸாவின் மகிமைதான்.

அவற்றைக் கண்டு மகிழ்ந்து போன மன்னன் நினைத்தார் 'விலை மதிப்பற்ற இவற்றைப் அடைய என்னுடைய நண்பன் தம்மகோசாதான் (*Dhammasoka*) தகுதியானவர்' இப்படியாக நினைத்தவர் அவை அனைத்தையும் தம்மகோசாவுக்கே அனுப்பி விட்டார். தம்மகோசாவும், தேவனாம்பியதிஸ்ஸாவும் அதுவரை ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதே இல்லை என்றாலும், இருவரும் மன்னர்கள் என்ற முறையில் நல்ல நண்பர்களாக இருந்தனர்.

தன்னுடைய தூதுவர்களாக மருமகன் மஹாரிட்டா (*Maharittha*), தலைமை அமைச்சர், சேனாதிபதி மற்றும் பொருளாளர் என நான்கு பேரை அவர் அனுப்பினார். அவர்களில் ஒருவரான மஹாரிட்டா என்பவர் அவருடைய

அவருடைய மருமகன். அவர்களிடம் விலை மதிப்பற்ற அத்தனை பொருட்களையும், எட்டு வித முத்துக்கள், வலது பக்கம் சுழியிருந்த சங்கு போன்ற பொருட்களைத் தந்து அனுப்பி இருந்தார். அவர்கள் முதலில் சிலோனின் வடக்குப் பகுதியில் இருந்த ஜம்புகோலா (*Jambukola*) என்ற இடத்தை அடைந்து அங்கிருந்து ஏழு நாட்கள் பயணம் செய்து தாமலிட்டி (*Tamalitti*) என்ற துறைமுகத்தை அடைந்து , அங்கிருந்து இன்னும் ஏழு நாட்கள் பயணம் செய்து பாடலிபுரத்தை சென்றடைந்தனர். அங்கு சென்றவர்கள் தம்மகோசாவிடம் தம்முடைய மன்னன் கொடுத்து அனுப்பி இருந்த அனைத்து பரிசுப் பொருட்களையும் தந்தனர். அவர்களைக் கண்டதும் 'விலை மதிப்பற்ற இவை எதுவுமே நம்மிடம் இல்லை' என்பதால் மனம் மகிழ்ந்த மன்னன் வந்த அந்த நான்கு தூதுவருக்கும் ஐந்தாம் நூற்றாண்டுகளில் அந்த காலத்தில் வந்த விருந்தினர்களை கௌரவிக்கக் கொடுக்கப்பட்டு வந்த அரச பட்டப் பெயர்களை கொடுத்து கௌரவித்தார்.

வந்த தூதுவர்களுக்கு பல பரிசுப் பொருட்களை கொடுத்து கௌரவித்த பின் ஒரு மன்னனின் பட்டாபிஷேகத்திற்கு தேவையான மிகவும் அத்யாவசியமான பொருட்களான கிரீடம், கவரி எருதின் வால் மயிரில் இருந்து செய்த பெரிய கை விசிறி, தலைப்பாகை, தோடுகள், மாலை, நிழற் குடை, வாள், மாலைகள், மஞ்சள் சந்தனம், துவைக்கத் தேவை இல்லாத இரண்டு ஆடைகள், மிக விலை உயர்ந்த கைக்குட்டைகள், நாகர்கள் தயாரித்த அபூர்ல முலிகைத் தைலம், விஷேசமான சங்கில் ஊற்றப்பட்ட அனோட்டட்டா (*Anotatta*) மற்றும் கங்கையில் இருந்து கொண்டு வந்த தண்ணீர், குடம், சிவப்பு மண், தங்க தாம்பாளங்கள், விலை உயர்ந்த பல்லக்கு, தேவ

மூலிகைகள், இளம் மங்கை, பட்டாபிஷேகத்திற்கென அறுபது முறை நூறு வண்டி அரிசி போன்றவற்றை தன்னுடைய பரிசாக அவர்களுடன் சென்ற தன்னுடைய தூதுவர்களிடம் கொடுத்தனுப்பினார். அது மட்டும் அல்ல வந்தவர்களிடம் ' நான் புத்தருடைய தத்துவத்தில் அடைக்கலம் ஆனவன். சாக்காவின் வம்சத்தில் வந்த புனிதருடைய உண்மையான சீடராக இருப்பேன் என சபதம் செய்து கொண்டவன் 'அறிவு ஜீவிகளே, உங்கள் ஆலோசனையை இதயபூர்வமாக ஏற்று உங்களிடம் இத்தனை இரத்தினங்களைக் கொடுத்து அனுப்பி உள்ள என் நண்பரின் பட்டாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நீங்கள் நடத்தி வைத்து அவரை கௌரவிக்க வேண்டும்' என்று தன் தரப்பில் கேட்டுக் கொண்டு அவர்களை அன்புடன் உபசரித்து வழி அனுப்பினார்.

வந்த இடத்தில் ஐந்து மாதங்கள் தங்கி இருந்தப் பின் மன்னனின் அளவற்ற உபசாரங்களை பெற்று மகிழ்ந்த தூதுவர்கள் விசாக மாதத்தின் (*Vesakha*) முதல் பௌர்ணமியில் அங்கிருந்துக் கிளம்பி பன்னிரண்டு நாட்களில் கங்கை நதியின் வாய் பகுதியில் இருந்த தாமலிட்டி (*Tamalitti*) என்ற இடத்தை அடைந்து, அங்கிருந்து ஜம்புகோலாவுக்குச் சென்று, பதினைந்தாம் நாள் தம் மன்னனை சந்தித்து தம்மகோசா கொடுத்தனுப்பிய பரிசுப் பொருட்களைக் கொடுத்தனர்.

அதன் பின் மாகசீரா (*Maggasira*) மாதத்தில் லங்காவின் மன்னனனுக்கு தம்மசோகா அறிவுறுத்தியபடியே மிக சிறப்பாக பட்டாபிஷேகம் செய்து லங்காவின் வருங்கால நன்மைக்கு வழி வகுத்தனர்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

கடவுளின் நண்பனாக கருதப்பட்ட அந்த மன்னனின் பட்டாபிஷேகம் விசாக மாதத்தில் பௌர்ணமியில் ஒரு பண்டிகைப் போல அனைவரும் கொண்டாடும் விதத்தில் அமைந்து இருந்தது.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினொன்றாம் பாகமான 'தேவனாமபியதிஸ்ஸாவின் முடிசூட்டு விழா' இப்படியாக நிறைவுற்றது.



ஓவியர் பார்வையில்
ஸ்ரீலங்காவின் பண்டைய கால மன்னர்களின் தோற்றம்